# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதலாம் வருட /முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு 2013 /2014

(செப்/ஒக் 2015)

## ATL 1142 தமிழ்மொழித் திறன் - I
## Tamil Language Skill – I

**நேரம்: 02 மணித்தியாலங்கள்**

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் இரு வினாக்களுக்கும் விடை தருக.**

---

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து
    அ) அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.
    ஆ) பொருத்தமான தலைப்பினைத் தருக.
    இ) சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

புராதன காலத்திலிருந்து நவீன காலம்வரை எல்லாச் சமூகங்களிலும் ஏதோ வகையிலான தொடர்பு முறைமை இருந்து வந்துள்ளது. இத் தொடர்பு முறைமையே சமூக அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கும், சமூகப் பராம்பரியம் ஒரு தலைமுறையிலிருந்து இன்னோர் தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கும் துணை புரிகின்றது. இத்தொடர்பு பல்வேறு சாதனங்கள் வழியாக ஏற்படுகின்றது. பண்டைக் காலத்தில் பறையறைந்து ஒரு செய்தியைத் தெரிவிப்பதிலிருந்து இன்று வானொலி மூலமோ தொலைக்காட்சி மூலமோ அறிவித்தல் கொடுக்கும் நிலைவரை இத்தொடர்பு முறையில் பல்வேறு வகைகளும் வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன.

இன்று பொதுசனத் தொடர்பு சாதனங்கள் என்ற சொற்றொடருக்குக் குறிப்பிட்ட திட்டவட்டமான பொருள் உண்டு. ஒரு சமூகத்தில் நிறுவனமோ அல்லது தனிநபரோ தமது கருத்துக்களைக் கூறவும் செய்திகளை அறிவிக்கவும் ஊடகங்களாக விளங்குபவையே பொதுசனத் தொடர்பு சாதனங்கள் (Mass Media) எனப்படுகின்றன. அதாவது இத்தொடர் பொதுசனங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு உதவும் சாதனங்களைக் குறிக்கின்றது. ஒரே சமயத்தில் பல்வேறு மக்களுடன் தொடர்புகொள்ளக் கூடிய நான்கு தொடர்புச் சாதனங்களை இன்றைய உலகிற் காணலாம். பத்திரிகை, வானொலி, சலனப்படம், தொலைக்காட்சி ஆகியவை இவையாகும். இவையே இன்று பல்வேறு நாடுகளிலும் அதிக அளவில் பயன்படுத்தப்படும் பொதுசனத் தொடர்புச் சாதனங்களாக விளங்குகின்றன.

இத்தொடர்பு சாதனங்களுக்கும் உலகில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் இடையே தொடர்புண்டு. உலகம் அடைந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் பெறுபேறுகளாகவே இத்தொடர்புச் சாதனங்கள் உருவாகின எனக் குறிப்பிடுவது பொருத்தமானது. பத்திரிகை, வானொலி, சலனப்படம், தொலைக்காட்சி ஆகிய இத் தொடர்புச் சாதனங்கள் யாவும் ஒரே காலத்தில் உருவாகின, பயன்பட்டன என்பதற்கில்லை. இச் சாதனங்களுள் காலத்தால் முந்தியது பத்திரிகையாகும். மனிதன் தனது கருத்துக்களை ஏனையோருடன் பரந்துபட்ட முறையில் பகிர்ந்து கொள்ள உதவிய முதல் தொழில்நுட்ப சாதனம் பத்திரிகை. இது அச்சுக்கலையை அடிப்படையாகக் கொண்டது. உடலுழைப்பும், நீண்ட காலமும் தேவைப்படும் கையெழுத்து முறை போலன்றி அச்சிற் பதிப்பிக்கும் முறை இலகுவானதாகும். ஒரே சமயத்திற் பல்லாயிரம் பிரதிகளை உண்டுபண்ணக் கூடியதாகவும் அமைந்தது.

(P.T.O)

கண்ணூன்றியும் கருத்தூன்றியும் படிக்க வேண்டிய கையெழுத்தைப் போலன்றி அச்செழுத்தில் பார்வையைப் பரவவிடுதல் மூலமே விஷயத்தைக் கிரகிக்க முடிந்தது. இத்தகைய அச்சுக் கலையின் முக்கியமான ஒரு விளைபொருளாகத்தான் பத்திரிகை தோன்றியது. இவ்வாறு கூறுவதனால் 1476ஆம் ஆண்டு முதலாவது அச்சுக்கூடம் அமைக்கப்பட்டதுமே பத்திரிகை மூலம் தொடர்பு கொள்ளுதல் உண்டானது என்பது பொருளல்ல. உண்மையில் இங்கிலாந்தில் அச்சுமுறை அறிமுகமாகி ஒன்றரை நூற்றாண்டுகளின் பின்னரேயே செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒழுங்கான இடைவெளிகளில் பிரசுரமாகும் பத்திரிகை வெளிவந்தது.

(40 புள்ளிகள்)

02. அ) கூட்டங்களின் முக்கியத்துவம் யாது? (04 புள்ளிகள்)

ஆ) கூட்டங்கள் பயனற்றதாகக் கூடிய **ஐந்து** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

இ) கூட்டங்களில் முக்கியம் பெறுவோரைக் குறிப்பிட்டு, அவர்களின் பொறுப்புக்களைத் தெளிவுறுத்துக. (16 புள்ளிகள்)

03. தொடர்பாடலில் பின்வருவன வகிக்கும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

அ) மின்னஞ்சல் (E Mail)

ஆ) முகநூல் (Face Book)

(30 புள்ளிகள்)

04. தொலைபேசி மூலம் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்க. (30 புள்ளிகள்)

05. பின்வரும் அழைப்பிதழை அடிப்படையாகக் கொண்டு வரவேற்புரை **அல்லது** நன்றியுரையினைத் தயாரிக்குக.

மட்டக்களப்பு மாநகரசபையின் அனுசரணையுடன்
மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும்

பேராசிரியர் செ.யோகராஜாவின்

***ஈழத்துத் தமிழ் நவீன கவிதை***

நூல் அறிமுகவிழா

**இடம்:** மட்டக்களப்பு பொதுநூலகக் கேட்போர் கூடம்

**காலம்:** 30.09.2015 புதன் கிழமை மாலை 5.00 மணி

**தலைமை:**
பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்
பதில் தலைவர்,
சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கல்லடி, மட்டக்களப்பு.

(P.T.O)

**பிரதம அதிதி:**

திருமதி. பி.எஸ்.எம் சார்ள்ஸ்
மாவட்ட அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு.

**சிறப்பு அதிதி:**

திரு. மா. உதயகுமார்
மாநகர ஆணையாளர், மட்டக்களப்பு

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

**நிகழ்ச்சி நிரல்:**

- மங்கல விளக்கேற்றல்
- மௌன இறை வணக்கம்
- வரவேற்பு நடனம் - மட்/புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை.
- வரவேற்புரை – செந்தில்குமார் - பொதுக் கலைமாணி, விடுகை வருடம், கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
- தலைமையுரை
- நூல் வெளியீடு
- நூல் அறிமுகவுரை - கலாநிதி எம். ரமீஸ் அப்துல்லாஹ், தலைவர், மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
- சிறப்பு அதிதி உரை
- பிரதம அதிதி உரை
- ஏற்புரை - நூலாசிரியர் பேராசிரியர் செ.யோகராஜா
- நன்றியுரை - செல்வி. எஸ். சத்தியகலா, தமிழ் சிறப்பு, விடுகை வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

(30 புள்ளிகள்)

**************************************